**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC – 366/2024**
**Deposition of witness for prosecution –PW–1**

| | |
|---|---|
| Name | : ராஜேஷ்குமார் |
| Father Name | : சுந்தரம் |
| Village | : மசினகுடி |
| Taluk | : உதகமண்டலம் |
| District | : நீலகிரி |
| Caste | : |
| Calling | : வனவர் |
| Religion | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 17th day of February 2025.

**<u>முதல் விசாரணை:</u>**

தற்போது நான் கீழக்கரை வனச்சரகத்தில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணி புரிந்த கடந்த 28.08.2023ம் தேதி இராமநாதபுரம் வன உயிரின சரகத்திற்கு உட்பட்ட தேவிப்ட்டிணம் கடற்கரை பகுதியில் நானும் என்னுடன் வன காப்பாளர் பாலமுருகன் மற்றும் வேட்டைதடுப்பு காவர்களுடன் அன்றாட ரோந்து பணியில் இருக்கும்போது உதவி வன பாதுகாவலர் பயிற்சி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலில் என்னிடம் அளித்ததின் படி கடற்கரை உள்ள நாகூர் கனி என்பவரின் வீட்டிற்கு சென்று சோதனை செய்ய முற்படும்போது அவரின் வீட்டு வாசலி்ல் அரசால் பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளை பதப்படுத்தி கொண்டிருந்ததை கண்டோம். கடல் அட்டைகளை பிடிப்பது வன உயிரின குற்றம் என்பதால் உடனே நாகூர் கனி மற்றும் கடல் அட்டைகளை கைப்பற்றி என்னால் சம்பவ இடத்திலேயே ஸ்தல மகஜர் தயார் செய்தேன். கடல் அட்டை மற்றும் வெள்ளை நிற பெயிண்ட் வாளி கைப்பற்றினேன். அந்த ஸ்தல மகஜர் அ.சா.ஆ.1 ஆகும். அந்த வெள்ளை நிற பெயிண்ட் வாளி சா.பொ.1 ஆகும். சம்பவ இடத்தில் இருந்து மேல் விசாரணைக்காக இராமநாதபுரம் வன உயிரின சரகத்திற்கு நாகூர் கனி என்பவரை அழைத்து வந்தோம். குற்ற பொருள் எடுத்துக்கொண்டு வரப்பட்டது. இராமநாதபுரம் வன சரகத்திற்கு அழைத்து வரப்பட்ட நாகூர் கனி

என்பவரிடம் விசாரணை அலுவலர் திரு என்.சுரேஷ் குமார் உதவி வன பாதுகாவலர் அவர்களை விசாரணை செய்யும்போது நான் உடன் இருந்தேன். விசாரணையில் நாகூர் கனி என்பவரின் தகப்பனார் பெயர் சர்பூர் பாஷா என்றும் குற்றத்தை ஒத்துகொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை விசாரணை அலுவலர் முன்னிலையில் நான் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் மற்றும் எதிரி கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். அதை தொடர்ந்து எதிரியை விசாரணை அலுவலர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC – 366/2024**
**Deposition of witness for prosecution –PW-2**

| | |
|---|---|
| Name | : பாலமுருகன் |
| Father Name | : கண்ணதாசன் |
| Village | : ஆர்.காவனூர் |
| Taluk | : இராமநாதபுரம் |
| District | : இராமநாதபுரம் |
| Caste | : |
| Calling | : வனகாப்பாளர் |
| Religion | : |
| Age | : 28 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 17th day of February 2025.

**முதல் விசாரணை:**

தற்போது நான் இராமநாதபுரம் வனச்சரகத்தில் வனகாப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணி புரிந்த கடந்த 28.08.2023ம் தேதி இராமநாதபுரம் வன உயிரின சரகத்திற்கு உட்பட்ட தேவிப்ட்டிணம் கடற்கரை பகுதியில் நானும் என்னுடன் வனவர் ராஜேஷ்குமார் மற்றும் வேட்டைதடுப்பு காவர்களுடன் அன்றாட ரோந்து பணியில் இருக்கும்போது உதவி வன பாதுகாவலர் பயிற்சி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலில் என்னிடம் அளித்ததின் படி கடற்கரை உள்ள நாகூர் கனி என்பவரின் வீட்டிற்கு சென்று சோதனை செய்ய முற்படும்போது அவரின் வீட்டு வாசலில் அரசால் பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளை காயப்படுத்தி கொண்டிருந்ததை கண்டோம். கடல் அட்டைகளை பிடிப்பது வன உயிரின குற்றம் என்பதால் உடனே நாகூர் கனி மற்றும் கடல் அட்டைகளை கைப்பற்றி என்னால் சம்பவ இடத்திலேயே ஸ்தல மகஜர் தயார் செய்தார். கடல் அட்டை மற்றும் வெள்ளை நிற பெயிண்ட் வாளி கைப்பற்றினார். அந்த ஸ்தல மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும். அந்த வெள்ளை நிற பெயிண்ட் வாளி சா.பொ.1 ஆகும். சம்பவ இடத்தில் நான் H நமூனா தயார் செய்தேன். அந்த ஹெச் நமூனா அ.சா.ஆ.4 ஆகும். மேல் விசாரணைக்காக இராமநாதபுரம் வன உயிரின சரகத்திற்கு நாகூர் கனி என்பவரை அழைத்து

வந்தோம். குற்ற பொருள் எடுத்துக்கொண்டு வரப்பட்டது. இராமநாதபுரம் வன சரகத்திற்கு அழைத்து வரப்பட்ட நாகூர் கனி என்பவரிடம் விசாரணை அலுவலர் திரு.என்.சுரேஷ் குமார் உதவி வன பாதுகாவலர் அவர்களை விசாரணை செய்யும்போது நான் உடன் இருந்தேன். விசாரணையில் நாகூர் கனி என்பவரின் தகப்பனார் பெயர் சர்பூர் பாஷா என்றும் குற்றத்தை ஒத்துகொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை விசாரணை அலுவலர் முன்னிலையில் வனவர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் மற்றும் எதிரி மற்றும் வனவர் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகும். அதை தொடர்ந்து எதிரியை விசாரணை அலுவலர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.